


ஹர்க்கத் அல் முக்காவாமா அல் இஸ்லாமியா என்கிற அரபுத் தொடருக்கு 'இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கம்' என்று அர்த்தம். சுருக்கமாக, Hamas. ரிப்போர்ட்டர் வாசகர்களுக்குக் கொஞ்சம் பரிச்சயமான இயக்கம்தான். 'நிலமெல்லாம் ரத்தம்' தொடரில் அவ்வப்போது வந்து போனவர்கள்.

1987-ல் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் என்று பொதுவாக ஒரு சௌகரியத்துக்குச் சொல்லுவார்கள். உண்மையில் எழுபதுகளின் இறுதியில் இருந்தே ஹமாஸ் செயல்பட ஆரம்பித்துவிட்டது. அப்போது அந்தப் பெயர் கிடையாது. ஆயுதங்கள் கிடையாது. பின்னாளில் பிரசித்தி பெற்ற கார் குண்டுகள் அப்போது கிடையாது. அடிதடி ரகளைகள் ஏதும் கிடையாது. இஸ்ரேலுக்கு எதிராகத் தங்கள் கருத்துகளை அமைதியாக எடுத்துச் சொல்லிவந்த ஒரு சாது இயக்கம். இயக்கம் என்று கூடச் சொல்லமுடியாது. ஒத்த கருத்துள்ள சில நண்பர்களின் கூட்டம்.

அந்தச் சில நண்பர்கள் பல நண்பர்களாகி, இன்னும் பலபேர் வந்து சேர்ந்து முறையான அரசியல், சமூகப்பணி, ராணுவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு அதிகாரபூர்வமாக ஆயுதம் தூக்கிய ஆண்டு 1987.

அதற்கு முன்னால் ஹமாஸின் தலையாய பணி, சாலைகள் போடுவதுதான். ஒரு பக்கம் பி.எல்.ஓ. இஸ்ரேலுடன் கடுமையாகப் போரிட்டுக்கொண்டிருக்க, மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் போக்குவரத்துகள் அடியோடு நாசமாகிப் போனது. எங்கு பார்த்தாலும் இடிபாடுகள் மட்டுமே.

யார் சாலைகளைச் சீரமைப்பார்கள்? பாலஸ்தீனை அபகரித்துக்கொண்டிருந்த இஸ்ரேல் அரசா? பாலஸ்தீன் போராளிகளா? அவர்களிடம் பணம் ஏது? வருகிற பணமெல்லாம் ஆயுதங்களாகிக்கொண்டிருந்தன. பசியும் பட்டினியும்தான் பாலஸ்தீன் முஸ்லிம்களின் நிரந்தரச் சொத்தாக இருந்தவை.

அந்த நிலையில், ஹமாஸைச் சேர்ந்தவர்கள்தான் ஒரு பொதுக் காரியமாக நிதி திரட்டி, பாலஸ்தீனின் பல சாலைகளைச் செப்பனிட்டுக்கொண்டிருந்தார்கள். இடிந்த பள்ளிக்கூடங்களைச் சீரமைத்து, பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தார்கள். பிராந்தியமெங்கும் சிறுசிறு மருத்துவ முகாம்கள் நடத்திக்கொண்டிருந்தார்கள். கொஞ்சம் காசு சேர்ந்ததும் மருத்துவமனைகள் கட்டினார்கள்.

நல்லதொரு சமூக இயக்கமாகத்தான் ஆரம்பத்தில் இருந்தது ஹமாஸ்.

ஆனால், எண்பதுகளின் தொடக்கத்தில் இருந்தே பாலஸ்தீன் போராளிகளை ஒழித்துக்கட்டும் பணியில் இஸ்ரேல் அரசு மிகத் தீவிரமாக இறங்க, இன்னொரு பக்கம் யாசிர் அராஃபத் சமரச

முயற்சிகளுக்கும் பேச்சுவார்த்தைகளுக்கும் அவர்களை வலிந்து அழைத்துக்கொண்டிருக்க, இந்த முரண்பாட்டை ஒட்டுமொத்த மத்தியக் கிழக்கு நாடுகளும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது சகிக்காமல்தான், ஹமாஸ் உறுப்பினர்கள் ஆயுதம் தூக்கத் தொடங்கினார்கள்.

அந்த 87-ம் ஆண்டில்தான் ஷேக் அகமது யாசின், ஹமாஸின் தலைவராக அதிகாரபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

எகிப்து அதிபர் நாசரால் ஆரம்பித்துவைக்கப்பட்ட 'இஸ்லாமிய சகோதரத்துவம்' என்கிற சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டு, அதனை அடியொற்றி வந்தவர்களுள் ஒருவர் யாசின். யாசிர் அராஃபத்தின் மதச்சார்பற்ற போராட்ட அரசியலில், அவருக்குத் துளி நம்பிக்கையும் கிடையாது. ஹமாஸின் போராட்டம், மதத்தை முன்னிறுத்தித் தொடங்கப்பட்டது. மதத்தின் பெயரால் அரசியல். மதத்தைத் தவிர்க்க முடியாத, தவிர்க்க விரும்பாத அரசியல்.

சென்ற வருடத்துக்கு முன்பு வரை ஹமாஸின் அரசியல் என்பதற்கு, ஆயுதப் போராட்டம் என்றே அர்த்தம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பாலஸ்தீன் அத்தாரிடியின் இன்றைய ஆளும் கட்சியாக, பாலஸ்தீனின் தவிர்க்க முடியாத மாபெரும் அரசியல் சக்தியாக ஹமாஸ் உருவெடுத்திருப்பதன் பின்னால், சுமார் இருபதாண்டு கால ரத்த அரசியல் ஒளிந்திருக்கிறது.

அடி, அடி... அடியென்றால் அப்படியொரு அடி பின்னியெடுத்திருக்கிறார்கள். குழந்தைகள் என்று பார்த்ததில்லை. பெண்கள் என்று பார்த்ததில்லை. வயதானவர்கள், மதிப்புக்குரியவர்கள், பெரியோர் என்று பார்த்ததில்லை. யூதரா? ஒழித்துக்கட்டு என்று கண்ணை மூடிக்கொண்டு கணக்குத் தீர்த்திருக்கிறார்கள்.

எத்தனை கோபம்? எத்தனை உக்கிரம்? எத்தனை ஆங்காரம்? ஆயிரக்கணக்கான துப்பாக்கிச் சூடுகள். கணக்கு வழக்கில்லாத வெடிகுண்டுத் தாக்குதல்கள். பேருந்துகளில் வைப்பார்கள். வழிபாட்டுத் தலங்களில் வைப்பார்கள். அலுவலகங்களில் வைப்பார்கள். சாலைகளில் வைப்பார்கள். சந்து, பொந்துகளில்கூட வைப்பார்கள். கோபம் முற்றும்போது, ஏவுகணைகளால் தாக்குவார்கள். ஹமாஸுக்கென்றே தயாரிக்கப்பட்ட பிரத்தியேக ஏவுகணைகள் உண்டு (விவரம் பின்னால் வரும்.).

அனைத்தையும் வகுத்துக் கொடுத்து வழிநடத்தி வந்தவர் ஷேக் அகமது யாசின். இளமை மிடுக்கோடு சேர்ந்து வந்த அந்த யுத்த தாகம், தள்ளாத வயதிலும் அவருக்குத் தணியாமல்தான் இருந்தது.

இஸ்ரேலை ஒழித்துவிட வேண்டும். எப்பாடுபட்டாவது. என்ன செய்தாவது. பாலஸ்தீன், அரேபியர்களின் மண். இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பது அத்துமீறல். ஓரங்குல நிலத்தைக்கூட அவர்களுக்கு விட்டுத்தர முடியாது.

இதுதான் ஹமாஸின் தொடக்ககால முழக்கம்.

இந்த முழக்கத்துக்கு ஒரு பின்னிணைப்பு உண்டு. இஸ்ரேலை ஒழித்து பாலஸ்தீனை மீட்போம். அப்படி மீட்கும்போது, அது மதச்சார்பின்மைவாதிகளிடம் போய்விடாமலும் காப்போம். ஒரு முழுமையான இஸ்லாமிய தேசமாக ஆக்குவதே இலக்கு.

இது யாசிர் அராஃபத் மீதான ஹமாஸின் பார்வையைத் தெளிவாக விளக்கிவிடுகிறது அல்லவா?

ஆம். இஸ்லாமிய சகோதரத்துவம். எழுபதுகளிலும் எண்பதுகளிலும் இந்தச் சித்தாந்தம் மத்தியக்கிழக்கு தேசங்களின் வீர இளைஞர்களுக்குள் ஏற்படுத்திய தாக்கம் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்தச் சித்தாந்தத்தை நம்பி ஏற்று, ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போரிட்டு வென்ற

சாட்சியங்களும் அவர்களுக்கு இருந்தன.

முதல் உதாரணம் சூயஸ் கால்வாய் விவகாரம். தமது தேசத்தின் வழியே ஓடும் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார் எகிப்து அதிபர் நாசர். பிரிட்டன் தொடங்கி, அத்தனை ஐரோப்பிய தேசங்களும் இந்தியப் பெருங்கடலுக்குள் தங்கள் வர்த்தகக் கப்பல்களை அனுப்புவதற்கு இருந்த ஒரே வழி சூயஸ் கால்வாய். எகிப்துக்கு வடக்கே இருக்கிற மத்திய தரைக் கடலையும் கிழக்கே இருக்கிற செங்கடலையும் இணைக்கிற கால்வாய்.

பெயருக்குத்தான் கால்வாய். உண்மையில் அது ஒரு பெரிய நதியேதான். பிரமாண்டமான கப்பல்களெல்லாம் அணிவகுத்துச் செல்லும் மாபெரும் நீர்ப் பாதை. எகிப்துக்குள் இருக்கிற பாதை.

இந்தப் பாதை ஒழுங்காக இருந்தால்தான், ஐரோப்பியக் கப்பல்கள் கிழக்குலகத்துக்கு வந்து போக முடியும். இது மூடப்பட்டு விட்டால், மூன்று தலைகளைச் சுற்றித்தான் மூக்கைத் தொடவேண்டும். அதாவது, ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதையும் சுற்றிக்கொண்டு, தெற்கு அட்லாண்டிக் கடல் வழி மூலம் இந்தியப் பெருங்கடலுக்குள் வந்து சேரவேண்டும். ஒரு பயணத்துக்குள்ளாகவே கப்பல் கேப்டன்கள் கிழடு தட்டிப் போய்விடுவார்கள்.

ஆக, சூயஸ் கால்வாய் இல்லாது போனால் ஐரோப்பாவின் கடல் வாணிபம் செத்துவிடும்.

நாசருக்கு அப்போது இஸ்ரேலுடன்தான் பிரதானமான பஞ்சாயத்துகள் இருந்தன. எல்லைத் தொல்லைகள். ஊடுருவல் உபத்திரவங்கள். ஆக்கிரமிப்பு அக்கப்போர்கள். இஸ்ரேலுக்கும் சூயஸ் இல்லாவிட்டால் சூனியம்தான் என்கிறபடியால்தான், அந்த அதிரடி முடிவை அவர் எடுத்தார்.

ரொம்ப சுலபம். நைல் நதியின் குறுக்கே ஓர் அணை கட்டவேண்டியதன் அவசியத்தை விளக்கி நீளமாக ஓர் அறிக்கை வெளியிட்டுவிட்டு, சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கிவிட்டார். அங்கே ஆரம்பித்ததுதான் பிரச்னை.

பிரிட்டனுக்கு இஸ்ரேல் வேண்டப்பட்ட தேசம் என்பது மட்டும் காரணமல்ல. சூயஸ் கால்வாய் எகிப்தின் தனியுடைமை ஆகிவிடுகிற பட்சத்தில், இஸ்ரேலுக்கு நேருகிற இழப்பைப் போலப் பல நூறு மடங்கு இழப்பு பிரிட்டனுக்கே உண்டு. பிரான்ஸுக்கு இன்னும் கூட. அதனால்தான் வரிந்து கட்டிக்கொண்டு யுத்தத்துக்கு வந்துவிட்டார்கள்.

ஒண்டியாளாக இஸ்ரேல், பிரிட்டன், பிரான்ஸ் என்று மூன்று தேசங்களை நின்று சமாளித்தார் நாசர். சந்தேகமில்லாமல் அந்த யுத்தத்தில் பிரிட்டனுக்கு நேர்ந்தது தோல்விதான். நாசர் என்கிற மனிதர் எத்தனை பெரிய மாவீரர், எத்தனை சிறந்த அரசியல்வாதி என்று உலகுக்குத் தெரிவித்த சம்பவம் அது.

ஹமாஸுக்கு அது மிகப்பெரிய இன்ஸ்பிரேஷன்.

இரண்டாவது உதாரணம், ஈரானில் நிகழ்ந்த இஸ்லாமியப் புரட்சி. எண்பதுகளின் தொடக்கத்தில் அயாதுல்லா கொமேனி என்கிற பெயர் அங்கே ஒரு மந்திரச் சொல். ஈரானில் மட்டுமல்ல; ஒட்டுமொத்த மத்தியக் கிழக்கு தேசங்களிலும்.

ஈரானின் மன்னர் ஷா முகம்மது ரெஸா பாலவிக்கு எதிராக அவர் மேற்கொண்ட புரட்சிகர நடவடிக்கைகளும் இறுதியில் கிடைத்த மாபெரும் வெற்றியும், மேற்கத்திய மயக்கத்தில் மூழ்கிக் கிடந்த ஈரானில் ஓர் இஸ்லாமிய ஆட்சி உருவானதும் ஹமாஸை மிகவும் சிந்திக்க வைத்தது.

கொமேனி, ஷியா முஸ்லிம்தான். ரான் ஷியா தேசம்தான். ஹமாஸும் பாலஸ்தீனியர்களும் சன்னி முஸ்லிம்கள்.

ஆனாலும் இஸ்லாத்தில் ஷியா, சன்னி பிரிவுகள் உண்டே தவிர, இஸ்லாமியப் புரட்சி என்று வரும்போது அதெல்லாம் பார்ப்பதற்கில்லை. நல்லதை யார் சொன்னாலும் கேட்கவேண்டும். யார் செய்து, சாதித்தாலும் பின்பற்ற வேண்டும். தவறில்லை என்று அவர்கள் நினைத்தார்கள்.

கிட்டத்தட்ட அதே காலகட்டத்தில்தான் பக்கத்து தேசமான லெபனானில் கொமேனியின் தாக்கமுடன் ஹிஸ்புல்லா ஒரு பெரும் சக்தியாக உருவெடுத்ததையும் அவர்கள் பார்த்தார்கள். ஆகவே, இஸ்லாமிய சகோதரத்துவம்.

ஆனால், யாசிர் அராஃபத்துக்கு இது பிடிக்கவில்லை. ஹமாஸின் எழுச்சி. காஸா பகுதியில் மக்களை அவர்கள் அதிகம் வசீகரிப்பது. இஸ்ரேலிய இலக்குகள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்திக்கொண்டே இருந்தார்கள். அனைத்தும் தனியாவர்த்தனம்.

இங்கே பாலஸ்தீனியப் போராளி இயக்கங்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி, பி.எல்.ஓ. என்கிற அமைப்பின்கீழ் கொண்டு வரப் படாதபாடு பட்டு, கருத்து வேற்றுமைகளைக் களைந்து, இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக ராப்பகலாகப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் யாசிர் அராஃபத்துக்கு ஹமாஸின் தோற்றம் ஆரம்பத்தில் பிடிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

ஆனால் என்ன செய்யமுடியும்? அவர்களும் பாலஸ்தீனின் விடுதலைக்காகத்தான் போராடுகிறார்கள். மதத்தை முன்னிறுத்திப் போராடுகிறார்கள். அராஃபத்திடம் அது கிடையாது. அரசியலையும் மதத்தையும் கலக்கவேண்டாம் என்று தொடக்கத்திலிருந்தே சொல்லி வந்தவர் அவர்.

ஆனால் எது எடுபடும்? உணர்ச்சிவயப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த பாலஸ்தீனிய முஸ்லிம்களுக்கு, ஒரு கட்டத்தில் அராஃபத்தைக் காட்டிலும் ஹமாஸ் அதிக நம்பிக்கை அளித்ததை மறுக்கமுடியாது.

இதை அராஃபத்தைக் காட்டிலும் இஸ்ரேலிய அரசாங்கம் கவனமாக உற்றுநோக்கிக்கொண்டிருந்தது.

அட, இதுயார் புது கோஷ்டி? ஹமாஸாமே? அராஃபத்துக்கு எதிராகக் கிளம்பியிருக்கிறார்களா? பலே, பலே.

அமெரிக்கா கையாளும் அதே டெக்னிக். எதிரிக்கு எதிரி நண்பன் என்கிற மிகப் புராதனமான டெக்னிக்.

அவர்கள் ஹமாஸை வளைக்க முடிவு செய்தார்கள். அராஃபத்துக்கு எதிராக ஹமாஸைச் செயல்பட வைக்க நினைத்தார்கள். சொந்தச் சகோதரர்களுக்கிடையே குட்டையைக் குழப்பிக் கொஞ்சம் குளிர்காயும் உத்தேசம்.

ஆனால், அவர்களுக்கு ஹமாஸைத் தெரியவில்லை. ஷேக் அகமது யாசின் எப்படிப்பட்டவர் என்பது சுத்தமாகத் தெரிந்திருக்கவில்லை.

ஹமாஸை வளர்த்துவிடவே ஏகப்பட்ட செலவு செய்ய முடிவு செய்தது இஸ்ரேல் அரசாங்கம். ஹமாஸ் வளரத்தான் செய்தது. ஆனால், இஸ்ரேலின் நிழலில் அல்ல. பாலஸ்தீனியர்களின் மடியில்.